**கிரிபாவ பிரதேச சபையின் - 2022**

**---------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிரிபாவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கிரிபாவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சுஜபுயீனு கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெறுமதியும் சொத்துக்களின் தன்மையும் மற்றும் ஆயுட்காலத்திற்கு இணங்க அது நிலையான சொத்தாக இனங்காணப்படாது மிகவும் சிறிய பெறுமதியினைக் கொண்டதும் மீண்டும் விற்பனை செய்து பணமாக்க முடியாததுமான குறுகிய ஆயுளைக் கொண்ட விடயங்கள் நிலையான சொத்துக்கள் கணக்கிற்கு உள்ளடக்கபட்டபடிருந்தன. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (ஆ) | 57 நாட்குறிப்புக்களின் மூலம் எச்சப்பொருள் களஞ்சியத்தின் ஆரம்ப மீதிக்கும் இறுதி மீதிக்குமிடையிலான வித்தியாசமாகிய ரூபா 20,849 தொகை மூலதன உள்ளீட்டிற்கு பங்களிப்புச் செய்தல் கணக்கிற்கு வரவு வைத்ததினால் செலவுகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எச்சப் பொருள் களஞ்சியத்தின் மிகுதியாக 2014 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் பெறுமதி காணப்பட்டது அதற்கிணங்க எதிர்வரும் காலங்களில் சரிசெய்யப்படும். | -மேற்படி- |

## 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பெறுமதிக்கும் நிதிக்கூற்றுக்களுக்கான பட்டோலைகளின் பெறுமதிக்குமிடையே ரூபா 3,945,433 இணக்கமன்மை காணப்பட்டது. | அடுத்துவரும் காலங்களில் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடலவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும்.. |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) சட்ட விதி | | | |
| (i) சட்ட விதி 59 | மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம், வியாபார வரி கைத்தொழில் வரி தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) சட்ட விதி 218 | நியமிக்கப்பட்ட சபையினால் வருடாந்தம் காணி கட்டிடங்களை உள்ளடக்கி அனைத்து சொத்துக்களும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை நடைமுறைகள் தாமதமடைந்துள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 1,792,758 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,966,795 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை (பட்டியலிடப்பட்ட வருமானத்தில்) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை (பட்டியலிடப்பட்ட வருமானத்தில்) |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| i. வீத வரியும் வரியும் | 15 | 76 | 76 | 0 | 15 | - | 15 | 0 |
| ii. வாடகை | 1887 | 1989 | 1865 | 124 | 2206 | 1399 | 967 | 432 |
| iii. அனுமதிப்பத்திர கட்டணம் | 112 | 972 | 972 | 0 | 100 | 867 | 867 | 0 |
| iv. ஏனைய வருமானம் | 9,369 | 14,196 | 10,513 | 3,683 | 3,500 | 3,500 | 1,486 | 2,013 |
| மொத்தம் | 11,383 | 17,233 | 13,426 | 3,807 | 5,821 | 5,766 | 3,335 | 2,445 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| சபையினால் வருடாந்தம் கேள்வியின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 96,260 குத்தகைப் பணமாகிய 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய நிலுவை மீதியானது அறவிட வேண்டியிருந்தது. | ரூபா 4,000 வீதம் தவணைப் பணமாக செலுத்துவதற்கு குத்தகைதாரர் இணங்கியுள்ளார். | நிலுவையான குத்தகை வாடகையைத் துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |

**(ஆ) நீதிமன்ற தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 5,674,000 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,153,627 ஆகும். | அடுத்துவரும் காலங்களில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்லவாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 60,871,846 ஆக இருந்ததுடன் அவற்றில் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலம் தொடர்பான கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 60,871,846 ஆகும். | நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதிகள் மற்றும் கேள்வி வைப்புக்களை மீளச் செலுத்தக் கூடியதான ஆதனங்களின் குத்தகை காலம் பூர்த்தியடைந்நததன் பின்னர் என்பதனால் உடன்படிக்கை செய்த பிணையினை குத்தகை காலம் பூர்த்தியடைந்ததன் பின்னர் செலுத்த முடியும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) ஒப்படைக்கப்படாத சொத்துக்கள்** | | |
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ஜீப்வண்டிகளினதும் கெப் வாகனத்தினதும் உரிமை மற்றும் சபையின் காணி கட்டிடங்கள் மற்றும் மயானங்கள் ஆகிய 34 சொத்துக்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஜீப் வண்டியை ஒப்படைக்குமாறு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் கெப் வாகனத்தை பொறுப்பேற்பதற்காக மாகாண சபைகள் அமைச்சிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ஆ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை** | | |
| சபையின் பல மயானங்களில் பாதுகாப்பு வேலி எல்லைகளைப் பயன்படுத்தி முறையான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மயானங்களக்கான எல்லையை தயார்படுத:துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை** | | |
| சபையினால் தளபாடங்கள், உபகரணங்கள், இயந்திரங்களும் உபகரணங்களும், என்பவற்றிற்காக சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் வாகனங்களின் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து சொத்துக்களும் ஏடுகளுக்கு கொண்டு வரப்பட்டு நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |

## 3.3 பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் நீர் பவுஸர் 05 ஆண்டுகள் காலமாக பயன்படுத்தப்படாது துருப்பிடித்துக் காணப்பட்டதுடன் சபையின் 146 குழாய்க் கிணறுகளில் 69 குழாய்க் கிணறுகளும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன. மேலும் சபையிடம் கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கழிவுப் பொருள் பெட்டி 2022 ஆம் ஆண்டின் போது எந்த தேவைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் பெட்டியானது தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும். | பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை திருத்தம் செய்வதற்கும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| மூன்றாம் பிரிவில் 01 வெற்றிடமும் இரண்டாம் பிரிவில் 06 வெற்றிடங்களும் ஆரம்ப பிரிவில் 09 வெற்றிடங்களும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்டன. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 17,100 மற்றும் மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியதான ரூபா 14,099 ஆக மொத்தமாக ரூபா 31,199 தொகையான அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி காணப்பட்டது. | ஊழியர் கடன் நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக்கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 02 வருமான விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 57 சதவீத்திலிருந்து 89 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதுடன் 04 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 32 சதவீத்திலிருந்து 92 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதன் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயனட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சிறந்த பாதீட்டுக் கட்டுப்பாடு பேணப்படுதல் வேண்டும். |